அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் – கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினிகள் – உதவித்தொகை!

ரூ.13 லட்சம் கோடி அந்நிய முதலீடு! 35 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்தவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

மேயர் பிரியா தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேச்சு!

சென்னை,பிப்.18-

சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் மேயர். பிரியா ராஜன் தலைமையில் சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், திரு.வி.க.நகர் வடக்கு பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு "மனிதநேய விழா - 1", அன்புன் அறமும் திராவிட மாடல்! ஆதவன் ஒன்றே அனைவரின் காவல்! எனும் தலைப்பில், மாபெரும் நலத்திட்டம் 16.2.2026, அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் 150 கல்லூரி மாணவர்களுக்கு மடிக் கணினி, 500 கல்லூரி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் உபகரணங்களை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார்.

விழாவில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆற்றிய உரை வருமாறு:

"அரசியல் சாசனத்தைத் தந்த அண்ணல் அம்பேத்கருடைய பெயரில் அமைந்திருக்கின்ற இந்த அரங்கத்தில், உங்களையெல்லாம் காண்பது மகிழ்ச்சியும் பெருமையும் தருகின்ற ஒரு நிகழ்வாக நான் பார்க்கின்றேன்.

கிறிஸ்தவர்களும் இஸ்லாமியரும் இருக்கின்ற வரைதான் நீ இந்து. அவர்களை அழித்துவிட்டால் நீ இந்து அல்ல நீ சூத்திரன் என்று சொன்ன தந்தை பெரியார் அவர்களை வணங்குகிறேன். கடல் அலைகள் இருக்கின்ற வரைக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உணர்வு என்பது என்றைக்குமே பரவிக்கொண்டே இருக்கும் என்று சொன்ன எம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களை வணங்குகின்றேன்.

கல்வி மட்டுமே சமத்துவப்படுத்தக்கூடிய மிகப் பெரிய ஆயுதம் என்று சொன்ன முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகின்றேன். இவர்களின் ஒட்டுமொத்த உருவாக இருக்கின்ற நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெறுகின்ற இந்த கூட்டத்தை, மிகச் சிறப்பான முறையிலே தனக்கென்று ஒரு பாணியை உருவாக்கிக்கொண்டிருக்கின்ற எங்களது அமைச்சர், எங்களது மாவட்ட கழகச் செயலாளர், எனது அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய சேகர்பாபு அவர்களை வணங்குகின்றேன்.

தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் முதலமைச்சருடைய பிறந்தநாளை முன்னிட்டு நடைபெறுகின்ற இது போன்ற நிகழ்ச்சியிலே தவறாமல் என்னை அவர் அழைப்பார். முடிந்த பிப்ரவரி 14 மட்டுமல்ல, காதலர் தினம் எனக்கும் இந்த கிழக்கு மாவட்டத்திற்கும் 365 நாளும் ஒரு காதல் உண்டு என்பதை நிரூபிக்கின்ற விதமாகத்தான் ஒவ்வொரு முறையும் என்னை அவர் அழைத்துக் கொண்டிருக்கின்றார். அவர்களுக்கு என்னுடைய நன்றிகள்.

குறிப்பாக இந்த நிகழ்வை தலைமையேற்று நடத்திக்கொண்டிருக்கின்ற நம்முடைய மேயர் சகோதரி பிரியா ராஜன் அவர்களுக்கு என் வணக்கங்கள். உரையாற்றி அமர்ந்திருக்கின்ற நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி அவர்களுக்கும், உரையாற்றி அமர்ந்திருக்கின்ற தமிழ்வேந்தன் அவர்களுக்கும், கலந்துகொண்டு சிறப்பித்துக்கொண்டிருக்கின்ற சாமிக்கண்ணு, புனிதவதி எத்திராசன், சரிதா மகேஷ்குமார்...

இங்கே வருகை தந்திருக்கின்ற நம்முடைய திரைக் கலைஞர்கள் சகோதரி தேவயானி, சகோதரர் அர்ஜுன் தாஸ், இங்கே வருகை தந்து சிறப்பித்துக்கொண்டிருக்கின்ற கிருஷ்ணமூர்த்தி, கே.எஸ்.ரவிச்சந்திரன், சகோதரர் தமிழன் பிரசன்னா, பி.டி.செல்வகுமார், நம்முடைய மாமன்ற உறுப்பினர் சரவணன், நிறைவாக நன்றியுரையாற்ற இருக்கின்ற கிருஷ்ணகுமார் உள்ளிட்ட வருகை தந்திருக்கின்ற அனைத்து இளைய சமுதாயத்திற்கும் என்னுடைய வணக்கங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

குறிப்பாக இந்த 13-ஆம் தேதி அன்னைக்கு நீங்க பார்த்திருப்பீங்க, சன் ரைஸ் (Sun Rise) ஆகக் கூடிய நேரத்துல நம்முடைய மகளிருக்கெல்லாம் சர்ப்ரைஸ் (Surprise) கொடுத்தார் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர். அதுதான் மகளிர் உரிமைத் தொகை என்கின்ற அந்த திட்டத்தின் மூலமாக 5000 ரூபாய் வழங்கினார். உடனே எல்லாரும் சொன்னாங்க 'தேர்தல் வந்துருச்சுங்க, தேர்தல் ஸ்டண்ட் (Stunt) அடிக்கிறாங்க' அப்படின்னு எல்லாரும் சொன்னாங்க.

'1000 ரூபாயை நிறுத்தினால் 5000 ரூபாயாக வழங்குவேன்'!

தமிழ்நாட்டு முதலமைச்சர் ரொம்ப தெளிவாகச் சொல்லியிருக்கார், நேற்று உரையாற்றிய நம்முடைய துணை முதலமைச்சர் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார். ஒன்றிய அரசாங்கத்தைச் சார்ந்திருக்கின்ற அந்த கட்சியைச் சார்ந்திருக்கின்ற ஒரு வழக்கறிஞர் கோர்ட்டுக்கு (Court) போய், நமக்கு வழங்கப்படுகின்ற இந்த மகளிர் உரிமைத் தொகையை நிறுத்துவதற்கான எல்லாப் பணியும் அவர்கள் செய்தார்கள். அதை உணர்ந்த தமிழ்நாட்டு முதலமைச்சர் 'நான் என்னுடைய தாய்மார்களுக்கு கொடுக்கக்கூடிய 1000 ரூபாயை நிறுத்தினால் 5000 ரூபாயாக வழங்குவேன்' என்று சொல்லிதான் அந்தத் திட்டத்தையே நமக்குக் கொடுத்திருக்கார்.

நினைச்சுப் பாருங்க. இங்க எல்லாரும் பேசின மாதிரி நான் முதல்வன் திட்டமாக இருந்தாலும், தமிழ்ப் புதல்வன் திட்டமாக இருந்தாலும் அல்லது புதுமைப் பெண் திட்டமாக இருந்தாலும் நாளைக்கு இதையும் நிறுத்தக்கூடிய வகைக்கு அவர்கள் செல்லக்கூடும். கவலைப்பட வேண்டாம். அப்பவும் அதைத் தடுத்துக் காக்கக்கூடியவராக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இருப்பார் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே உரையாற்றியவர்கள் எல்லாம் சொன்னது போல, குறிப்பாக நம்முடைய திரைக்கலைஞர் சகோதரி தேவயானி அவர்கள், ஏற்கனவே ஒருமுறை அவர்களோடு நான் பாரதியார் அவர்கள் வாழ்ந்த இல்லத்திலே ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அந்த ஞாபகம் எனக்கு உண்டு. கிட்டத்தட்ட ஒரு மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக நாங்கள் கலந்துகொண்டிருக்கின்றோம். ரொம்ப அழகாகச் சொன்னாங்க, 'சமீபத்துல கூட நான் ஒரு டிகிரி (Degree) முடிச்சிருக்கேன்' என்று சொன்னார்கள். பீயிங் எ மினிஸ்டர் (Being a minister), நானும் கடந்த ஆண்டு பி.எச்.டி (Ph.D) வாங்கி இருக்கிறேன் என்று சொன்னால், உங்களுடைய டெசிக்னேஷன் (Designation) எதுவாக இருந்தாலும், டெடிகேஷன் (Dedication) இஸ் மோஸ்ட் இம்பார்ட்டண்ட் தன் டெசிக்னேஷன் (is most important than designation) என்று சொல்வது போல டெடிகேட்டட்-ஆக (Dedicated) படிங்க.

நம்மதான் அமைச்சராயிட்டோமே, இனிமே நம்ம படிச்சு என்ன? நமக்கான மாலை, மரியாதை, கார், அந்தஸ்து இதெல்லாம் இப்பதானே போகிறது என்று நினைக்கப் போகிறோமா..."

"...அல்லது நமக்கு வாய்ப்பு கிடைக்கும் பொழுதெல்லாம், 2021-ல நான் பள்ளிக்கல்வித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று அதே ஆண்டு அக்டோபர் மாதம் பாரதிதாசன் யுனிவர்சிட்டியில (University) பி.எச்.டி-க்கு (Ph.D) அப்ளை (Apply) பண்ணி, கடந்த ஆண்டு அதை நிறைவு செய்து இப்ப நீங்க 'முனைவர்' பட்டம் நான் பெற்றிருக்கின்றேன்.

'தமிழ்நாடு சூப்பர் ஸ்டேட்'

படிப்போட அவசியம் என்ன என்பதை ரொம்ப அழகாக, 'ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப் புடைத்து' என்கிற அந்த வள்ளுவருடைய வாக்கை ரொம்ப அழகாக இங்கே பேசி அமர்ந்திருக்கின்றார்கள் தேவயானி அவர்கள். அதனாலதான் உங்களுடைய படிப்பு என்று வரும்போது தயவுசெய்து அதை கம்ப்ளீட் (Complete) பண்ணுங்க பாதி வழியில் நிறுத்தாதீங்க. அன்பில் மகேஷ் பொய்யாமொழி பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அப்படிங்கிறது என்னுடைய தலைவர் என் மீது நம்பிக்கை வைத்து அளித்தார். மக்கள் என் மீது நம்பிக்கை வைத்து எனக்கு வாக்களித்தல் அது எனக்கு உண்டு.

ஆனால் நான் மறையும் வரைக்கும் 'அன்பில் மகேஷ் பொய்யாமொழி MCA, Ph.D' அப்படின்ற துதான் கடைசி வரைக்கும் என் கூட வரும். அது தான் கல்வியுடைய மிகப்பெரிய சக்தி என்பதை நாம் உணர்ந்திட வேண்டும். அவங்க பேசுனது மாதிரி நிறைய டிஸ்ட்ராக்ஷன்ஸ் (Distractions) வரும், அதெல்லாம் ஒதுக்கி வைங்க. படிக்க வேண்டிய வயசுல படிப்புல கவனத்தைச் செலுத்த வேண்டும். அதற்காகத்தான் இது போன்ற நிகழ்ச்சியை நம்முடைய சேகர்பாபு அவர்கள் தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றார்.

அது இந்த ஆண்டு தமிழ்நாட்டின் முதலமைச்சருடைய பிறந்தநாளை முதல் நிகழ்வாக இன்றைக்கு என்னை அழைத்திருக்கிறார். திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்துகொள்கின்றேன். நிறைவு நிகழ்ச்சியும் எங்க திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த திருச்சி சிவா அவர்கள் அதை நிறைவு செய்கிறார் என்று சொல்லும்போது எங்களுடைய திருச்சி மாவட்டத்திற்கான ஒரு பெருமையாக இதை நான் பார்க்கின்றேன்.

கிட்டத்தட்ட நீங்கள் வருகை தந்திருக்கின்ற உங்கள் அனைவருக்கும் மடிக்கணினி வழங்கக் கூடிய நிகழ்வு. உங்களுக்கான கல்வியுதவித் தொகை வழங்கும் நிகழ்வு என்று வரும்போது கல்லூரி மாணவர்கள் என்று வரும்போது எனக்கான பெருமை, திராவிட மாடல் அரசில் பள்ளிக் கல்வித் துறை பள்ளிக்கல்வியை மிகவும் மகிழ்ச்சியாக நிறைவு செய்து கல்லூரிக்கு வந்திருக்கக்கூடிய என்னுடைய இளைய சமுதாயத்திற்கான ஒரு நிகழ்வு. முதல் நிகழ்வாக நடைபெறுவது என்பது எங்களுக்கான ஒரு பெருமை

ஆக வருகை தந்திருக்கின்ற நீங்கள் எல்லாரும் சொல்வது போல 'தமிழ்நாடு சூப்பர் ஸ்டேட்' (Super State) அப்படின்னு நம்ம சொல்றோம். தமிழ்நாடு சூப்பர் ஸ்டேட்-னு யார் சொல்றா? சொல்லக்கூடியவர்கள் பொருளாதார நிபுணர்களாக இருப்பவர்கள், தொழிலதிபர்கள் இவங்க எல்லாம் சேர்ந்து சொல்றாங்க. காரணம் என்ன? கொஞ்சம் யோசித்துப் பார்த்தீங்கன்னா இது எப்படி சூப்பர் ஸ்டேட் ஆச்சு அப்படின்னு கொஞ்சம் யோசித்துப் பார்த்தீங்கன்னா நம்மை யறியாமல் இருமொழிக் கொள்கையை உயர்த்திப் பிடித்த நம்முடைய பேரறிஞர் அண்ணா நம்முடைய நினைவுக்கு வருவார்.

ஒரு கிலோமீட்டர், மூணு கிலோமீட்டர், ஐந்து கிலோமீட்டர், ஏழு கிலோமீட்டர்ல பள்ளிக்கூடம் இருந்திட வேண்டும், அது தொடக்கப் பள்ளியாக இருந்திட வேண்டும், அதன் பிறகு அது மிடில் ஸ்கூல் (Middle school), ஹை ஸ்கூல் (High school), ஹையர் செகண்டரி ஸ்கூல்-ஆக (Higher secondary school) இருந்திட வேண்டும் என்று அந்த கட்டமைப்பை உருவாக்கித் தந்த நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் நினைவுக்கு வருவார். 1997-லேயே ஐடி பாலிசியை (IT Policy) கொண்டு வந்த முதல் மாநிலம் நம்முடைய மாநிலம் என்று சொன்ன பொழுது அதைக் கொண்டு வந்த முத்தமிழறிஞர் கலைஞர் நம் நினைவுக்கு வருவார்.

ஸ்கூல் அப்படின்னு வரும்போது ஃபர்ஸ்ட் ஆக்சஸ் (First access) முக்கியம், முதல்ல பசங்களை ஸ்கூலுக்கு உள்ளக் கொண்டு வர வேண்டும். அதற்கு எதெல்லாம் தடையாக இருக்கிறதோ அதை உடைத்தெறிய வேண்டும் என்பதற்காகத் தான் காலை உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார் நம்முடைய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். அனைவரும் படித்திருக்க வேண்டும், வேலைக்குச் சென்றிட வேண்டும் என்பதற்காக 'நான் முதல்வன்' திட்டத்தைக் கொண்டு வந்தார்.

ஏறத்தாழ 13 லட்சம் கோடி ரூபாய் இன்றைக்கு அந்நிய முதலீட்டை இங்கே கொண்டு வந்து ஏறத்தாழ 35 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பை உருவாக்கித் தந்தது நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர், அவருக்குத்தான் இன்றைக்கு நாம் பிறந்தநாள் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம்.

70 வகையான திட்டங்கள்!

வருகை தந்திருக்கின்ற இளைய சமுதாயம், இன்றைக்கு தேவயானி அம்மா சொன்னது மாதிரி இன்றைக்கு 'மாதா பிதா குரு தெய்வம்' சொல்றோம் இல்லையா, 'மாதா பிதா கூகுள் (Google) தெய்வம்' என்று கூடச் சொல்லலாம். கூகுள்-ல போய் கொஞ்சம் சர்ச் (Search) பண்ணிப் பாருங்க எந்தெந்த அரசாங்கம் என்னென்ன செய்திருக்கிறது என்று, நாங்க சொல்றதை கூட நீங்க நம்ப வேண்டாம். இவங்க சொல்றது உண்மைதானா? என்னென்ன திட்டம் எல்லாம் கொண்டு வந்திருக்காங்க? பள்ளிக்கல்வித் துறை என்று சொன்னால் 70 வகையான திட்டங்களை நாங்கள் கொண்டு வந்திருக்கின்றோம்.

நம்முடைய மேயர் இங்கே சொன்னது மாதிரி கிராமப்புறத்தைச் சார்ந்திருப்பவர்கள் விமான நிலையம் வருவது மிகப்பெரிய விஷயம். கிராமத்திலிருந்து அண்ணாந்து பார்த்து விமானம் பறக்கும்போது கைதட்டி, சிரித்து, சந்தோஷப்பட்டது அந்த குழந்தைகள். ஆனால் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அந்தப் பிள்ளைகளை இன்றைக்கு அழைத்துச் சென்று மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான், சவுத் கொரியா... சவுத் கொரியா-ல அங்க இருக்கின்ற நாடாளுமன்றத்தில் எங்களுடைய அரசுப் பள்ளிப் பிள்ளைகளை உட்கார வைத்து நாங்கள் அழகு பார்க்கிறோம் என்று சொன்னால், அரசுப் பள்ளி என்பது வறுமையின் அடையாளம் அல்ல அது பெருமையின் அடையாளம் என்பதை உங்கள் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் சொல்லால் மட்டுமல்ல இது போன்ற பல செயல்களாலும் செய்து கொண்டிருக்கின்றார்.

அந்த முதலமைச்சர் வாழ வேண்டும் என்பதற்காகத்தான் இன்றைக்கு இது போன்ற பிறந்த நாள் நிகழ்ச்சி பட்டித்தொட்டி எல்லாம் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது."

"...நினைத்துப் பாருங்கள், அரசுப் பள்ளி என்பது வறுமையின் அடையாளம் அல்ல, அது பெருமையின் அடையாளம் என்பதை நிரூபிக்கும் வகையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றார்.

இன்றைக்கு அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் உலகத்தரம் வாய்ந்த கல்வியைப் பெற வேண்டும் என்பதற்காகத் தான், அவர்களை வெளிநாடுகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லும் திட்டத்தை முன்னெடுத்துள்ளோம். மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குச் சென்று அங்குள்ள கல்வி முறையை அவர்கள் நேரில் பார்த்து வியக்கிறார்கள். ஜப்பான் போன்ற நாடுகளுக்குச் சென்று அங்குள்ள தொழில்நுட்பங்களை அறிந்து கொள்கிறார்கள்.

குறிப்பாக, சவுத் கொரியா (South Korea) சென்ற நம்முடைய அரசுப் பள்ளி மாணவர்கள், அங்கிருக்கின்ற நாடாளுமன்றத்தில் (Parliament) அமர்ந்து விவாதிக்கும் வாய்ப்பைப் பெற்றார்கள் என்றால், அது அந்த மாணவர்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம். நமமய பிள்ளைகள் எதற்கும் சளைத்தவர்கள் அல்ல என்பதை இது காட்டுகிறது.

இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், உங்களுக்குக் கிடைக்கின்ற வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். 'கல்வி ஒன்றுதான் யாராலும் திருட முடியாத சொத்து' என்று சொன்ன கலைஞர் அவர்களின் வழியில், உங்களை நீங்களே செதுக்கிக் கொள்ள வேண்டும்.

நீங்க நல்லா படிங்க, உங்களுக்கான அனைத்து உதவிகளையும் செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது. உங்களுடைய கனவுகளை நனவாக்க முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமை உங்களுக்குப் பக்கபலமாக இருக்கும்."

"அரசுப் பள்ளி என்பது வறுமையின் அடையாளம் அல்ல, அது பெருமையின் அடையாளம்"!

"...அரசுப் பள்ளி என்பது வறுமையின் அடையாளம் அல்ல, அது பெருமையின் அடையாளம் என்பதை உங்கள் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் சொல்லால் மட்டுமல்ல, இது போன்ற பல செயல்களாலும் செய்து கொண்டிருக்கின்றார்.

அந்த முதலமைச்சர் வாழ வேண்டும் என்பதற்காகத்தான் இன்றைக்கு இது போன்ற பிறந்த நாள் நிகழ்ச்சி பட்டித்தொட்டி எல்லாம் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

நாங்கள் அரசுப் பள்ளிப் பிள்ளைகளைச் சுற்றுலா அழைத்துச் செல்லும்போது, வெறும் இடங்களை மட்டும் பார்ப்பதற்காக அழைத்துச் செல்லவில்லை. அவர்கள் உலகத்தோடு போட்டி போட வேண்டும் என்பதற்காக அழைத்துச் செல்கிறோம். ஜப்பான் (Japan) போன்ற நாடுகளுக்குச் சென்று அங்குள்ள தொழில்நுட்பங்களை (Technology) அவர்கள் பார்க்கிறார்கள். சிங்கப்பூர், மலேசியா நாடுகளுக்குச் சென்று அங்குள்ள கல்வி முறையை அறிகிறார்கள்.

மிக முக்கியமாக, தென் கொரியா (South Korea) சென்ற நம்முடைய பிள்ளைகள், அங்கிருக்கின்ற நாடாளுமன்றத்தில் (Parliament) அமர்ந்து விவாதிக்கும் அந்தப் பெருமையைப் பெற்றார்கள்.

இதுதான் திராவிட மாடல் அரசு அவர்களுக்கு வழங்கியிருக்கின்ற மிகப்பெரிய அங்கீகாரம்.

எனவே, மாணவர்கள் தங்களுக்குக் கிடைக்கின்ற இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி, கல்வியில் சிறந்து விளங்கி, இந்த நாட்டிற்கும் நம்முடைய மாநிலத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்."

இந்நலத்திட்டம் வழங்கும் விழாவில் கழக அமைப்புச் செயலாளர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ.கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா மண்டலக் குழுத் தலைவர்கள் பி.கே.மூர்த்தி.கூ.பீ.ஜெயின்.சரிதா மகேஷ்குமார், தொகுதி பார்வையாளர் என்.கிருஷ்ணமூர்த்தி.பகுதிக் கழகச் செயலாளர்கள் செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு.வே.வாசு, டி எஸ் பி ராஜகோபால் எம் சி. சொ. வேலு, எம் சி, வி. சுதாகர் பெரம்பூர்ஆர். ஓராஜன், புனிதவதிஎத்திராசன் எம்.சி. சுதாதீனதயாளன் MC ராஜேஸ்வரிஸ்ரீதர்AMC, டாக்டர் சாந்தகுமாரி எம் சி.நா.துலுக்கானம்.எம். பெரோஸ்கான்.கா.ராஜ்முகமது, இரா.வீரமணி, ரஞ்சித் விஜயன், ஆர் எஸ் சித்திக்,

தில்லை கதிரவன், புல்லட்கி.ரமேஷ், பி.புவனவதி, கினார் ஆறுமுகம், எஸ்.புஷ்பராஜ், பரிமளா சுரேஷ், மா.ருத்ரமூர்த்தி, எம்.ஏ.டீக்கா, எம்.இசட். அபோய், மு.சரவணன் எம்.சி, ரமணி லோகேஷ் எம்.சி, தமிழ்செல்வி சசிகுமார் எம்.சி, அ.கோவிந்தன் பி.சுகுமார் த.கருணாநிதி வனஜாசண்முகம் அ.கருணாநிதி, திரு வி.க.நகர் தெற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் தே.சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ் எம்.தமிம் வி.க.வெங்கடேசன் எஸ்.சசிகுமார் எஸ்.வெங்கடேசன் பா.பி.தாஸ், திரு வி.க.நகர் வடக்கு தெற்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் வி.ஜெகன் கே.என்.விஜய்(எ)ஸ்வீட்பாபு டி.சீனிவாசன் மதுரைபிரகாசம் எம்.துரைசாமி ஜெ.அண்ணாதுரை க.எழிலன் டி.ராஜு பி.இளஞ்செழியன் பி.சத்தீஷ் ஆர்.ராஜராஜன் வ.நாமதேவன் எம்.விஜயகுமார் இரா.புருஷோத்தமன் எல்.சுப்பிரமணி அ.விஜயகுமார் வெல்டிங்எஸ்.பாபு வே.து.தாமரைச்செல்வன் நெல்லை.மா.முத்தையா பா.பாபுமனோகரன் சி.நாகலிங்கம் அ.கதிரவன் எச்.திவாகர் ஆர்.பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள்ஃசெயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வட்ட கழக செயலாளர் ஜி.கிருஷ்ணகுமார் நன்றி கூறினார்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் 2025-2026 தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் கட்டப்பட்டுள்ள நவீன அறையுடன் கூடிய சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கல்வெட்டினை காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன் ஆகியோர் திறந்து வைத்தார்கள். உடன் காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி. எம்.மகாலட்சுமி யுவராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் பா. முருகேசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.க.ஆர்த்தி ஆகியோர் உள்ளனர்.

அதிகமாக பசுந்தேயிலை வழங்கிய

தேயிலை விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை- தொழிற்சாலைகளுக்கு வேளாண் கருவிகள்!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார்!

சென்னை, பிப். 18-

இண்ட்கோசர்வின் கீழ் செயல்பட்டு வரும் 16 தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு அதிகமாக பசுந்தேயிலை வழங்கிய 16 தேயிலை விவசாயிகளுக்கு ரூ. 4,00,000/- ஊக்கத்தொகையும், தொழிற்சாலைகளுக்கு ரூ.3.25 கோடி மதிப்பில் வேளாண் கருவிகளையும்

குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் வழங்கினார்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களால் கடந்த 09.04.2025 அன்று குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை மானியக் கோரிக்கையின் போது, நீலகிரி மாவட்டத்தில் இண்ட்கோசர்வ் கீழ் செயல்பட்டுவரும் 16 தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு கூடுதலாக பசுந்தேயிலை வழங்கும் சிறு விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாக ஊக்கத்தொகை வழங்கப்படும் என அறிவித்தார். அதன்படி இன்று (17.02.2026) தலைமைச் செயலகத்தில், தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு அதிகமாக பசுந்தேயிலை வழங்கிய 16 தேயிலை விவசாயிகளுக்கு தலா ரூ. 25,000/- வீதம் ரூ. 4,00,000/- மதிப்பிலான காசோலைகளை வழங்கினார்.

இண்ட்கோசர்வ் தேயிலை தொழிற்சாலைகளின் தேயிலை விவசாயிகளுக்கு விவசாயத்திற்கு தேவையான கருவிகளை குறைந்த கட்டணத்தில் பயன்படுத்தும் வகையில் ரூ.3.25 கோடி மதிப்பில் 1500 பசுந்தேயிலை சேகரிக்கும் கருவிகள் (Green Leaf Harvester), 180 மின் தெளிப்பான்கள் (Battery Operated Sprayer) 160 புதர்களை அகற்றும் கருவிகள் (Hedge Trimmer) அமைச்சர் அவர்களால் இன்று வழங்கப்பட்டது.

தேயிலை விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தொகைகள்–

நீலகிரி மாவட்டத்திலுள்ள 16 இண்ட்கோசர்வ் தேயிலை தொழிற்சாலைகளில் உள்ள 27,000 சிறு தேயிலை விவசாயிகளிடமிருந்து 5 ஆண்டு காலத்தில் 2,17,236 மெட்ரிக் டன் பசுந்தேயிலை கொள்முதல் செய்யப்பட்டு ரூ. 352.90 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2022-2023 ஆம் ஆண்டிற்கு கொள்முதல் செய்யப்பட்ட பசுந்தேயிலைக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.2 வீதம் மொத்தம் ரூ.8.51 கோடி கூடுதல் ஆதார விலையாக தேயிலை வழங்கிய விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பசுந்தேயிலை அறுவடை இயந்திரம் –

2023-24 ஆம் ஆண்டு ரூ.2.48 கோடி மானியத்தில் 1000 பசுந்தேயிலை அறுவடை இயந்திரங்கள் சிறு தேயிலை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகளின் புனரமைப்பு -

15 இண்ட்கோசர்வ் தொழிற்சாலைகளில் ரூ.67.74 கோடி மதிப்பில் நவீன இயந்திரங்கள் நிறுவப்பட்டு, உற்பத்தி திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த 5 ஆண்டு காலத்தில் 2,17,236 மெட்ரிக் டன் பசுந்தேயிலை கொள்முதல் செய்யப்பட்டு, அதிலிருந்து 57,486 மெட்ரிக் டன் தேயிலைத்தூள் உற்பத்தி செய்யப்பட்டது. இந்த டீ தூள்கள் ரூ.559.35 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும், சிறு தேயிலை விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைத்திட, 11,583 மெட்ரிக் டன் டீ தூள் இண்ட்கோசர்வ் நிறுவனத்தால் கொள்முதல் செய்யப்பட்டு, 'ஊட்டி டீ' என்ற பெயரில் நியாய விலைக் கடைகளில் ரூ. 253.06 கோடி மதிப்பில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலர் அதுல் ஆனந்த், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் L.நிர்மல்ராஜ், இண்ட்கோசர்வ் முதன்மை செயல் அலுவலர் ராஜ கோபால் சுன்கரா, ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் தெற்குப் பகுதி

மக்கள் முதல்வரின் மனிதநேய விழா!! மாபெரும் வாழ்த்தரங்கம்!!

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி. தலைமை!

சென்னை, பிப். 18-

சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் தெற்குப் பகுதி தி. மு. க. சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழா! கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மனிதநேயம் 5 'சகலமும் போற்றும் சரித்திரம்' தலைமையின் முதன்மை நிரந்தரம்! எனும் தலைப்பில் மாபெரும் வாழ்த்தரங்கம் நிகழ்ச்சி நாளை (19.02.2026) வியாழக்கிழமை மாலை 6.00 மணிக்கு பாடி யாதவாள் தெருவில், அம்பத்தூர் தெற்குப் பகுதி செயலாளர் டி.எஸ்.பி. இராஜ கோபால் MC தலைமையில் நடைபெறுகிறது.

கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி, மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர் பாபு, மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற